கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
ராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 18 புதன்கிழமை (01 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 66

# வட.-கிழக்கிலிருந்து படையை வாபஸ்பெற்று இடைக்கால அரசு நிறுவுமாறு யோசனை!

## ஸ்ரீலங்காவுக்கு சிபார்சு செய்ய ஐரோப்பிய நாடுகள் திட்டம்

கொழும்பு, பெப்ரவரி 1

வடக்கு – கிழக்கில் நிலைகொண்டுள்ள அரசாங்கப் படைகளை முற்றாக வாபஸ் பெற்று—

அங்கு இடைக்கால அரசு ஒன்றை நிறுவி—

ஐந்து ஆண்டு காலத்துக்கு ஆட்சிப் பொறுப்பை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும்—

என்று ஸ்ரீலங்கா அரசுக்கு சிபார்சு செய்யும் யோசனை ஒன்றை ஐரோப்பிய நாடுகள் பல சேர்ந்து தயாரித்து வருகின்றன.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள், சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்கள் ஊடாக இது தொடர்பான யோசனையை ஸ்ரீலங்கா அரசுக்கு அனுப்பி வைக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இழுபறி நிலையில் உள்ள வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தற்போதுள்ள ஒரேமார்க்கம் ஆயுதப்படைகளை வடக்கு — கிழக்கிலிருந்து வாபஸ் பெற்றுவிட்டு அங்கு ஆட்சியை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும்படி ஸ்ரீலங்கா அரசிடம் கோருவதுதான் என்று இந்த நாடுகள் கருதுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உள்ள வெளிநாடுகளும் டன் தமிழ் சமி... மான்களே இந்த யோசனையின் பின்னணியில் இருந்து வருவதாகவும்—

இந்த யோசனையை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளுமானால் ஸ்ரீலங்காவின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் அளவில் உதவி செய்ய பல நாடுகள் ஏற்கனவே விருப்பம் தெரிவிக்...

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாவோவுக்கு பின் பிரதமராகும் வாய்ப்பு அமைச்சர் தர்மசிறிக்கு?

கொழும்பு, பெப். 1

திருமணம் செய்வதற்கான வயது தமக்குக் கடந்து விட்டதாகவும் ஆனால் பிரதமர் பதவிக்கு தாம் தகுதியானவராக இருப்பதாகவும் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா "லங்கா தீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை பண்டார நாயக்கா குடும்பத்திடம் இருந்து கை மாறுமானால் தலைமையை ஏற்க நீங்கள் தயாரா என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் "மக்களே அதனை முடிவு செய்ய வேண்டும்" என்றார்.

எனக்கு கல்வி இருக்கிறது. நான் அரசியல் விஞ்ஞானம் படித்திருக்கிறேன்; சட்டம் பொருளாதாரம் படித்திருக்கிறேன். ஆகவே எனது தகைமைகள் குறித்து நான் கவலை அடையவில்லை என்றும் அவர் கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவராக தர்மசிறி சேனநாயக்கா கருதப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]



## காமினி கொலைத் தாக்குதல்: 'ஸ்கொட்' பொலீஸாரின் அறிக்கை வந்து சேர்ந்தது

கொழும்பு,பெப்.1

கடந்த ஒக்ரோபர் மாதம் காமினி திசாநாயக்கா கொலையுண்ட கிராண்ட்பாஸ் குண்டுத்தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸார் தமது அறிக்கையை இலங்கைப் பொலீஸாருக்கு அனுப்பியுள்ளனர்.

சம்பவம் நடைபெற்றஇடத்தில் எடுக்கப்பட்ட இரத்தமும் குண்டுத்தாக்குதல் நடத்தியதாகக் கருதப்பட்ட பெண்ணின் உடல் உறுப்புக்களும் ஸ்கொட்லண்யார்ட் பொலீஸாரின் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன.

அங்கு அனுப்பப்பட்ட இரத்தமும் உடல் உறுப்புக்களும் ஒரே ஆளுக்குரியவை என்று ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஒ-3)

## அக்கரைப்பற்று பகுதியில் 12 கடைகள் எரிந்து நாசம்

கொழும்பு,பெப்.1

மட்டக்களப்பு மாவட்டம் அக்கரைப்பற்று கருங்குடித்தீவு பொதுச்சந்தையில் அமைந்துள்ள 12 கடைகள் கடந்த சனியன்று இரவு தீப்பிடித்து எரிந்து நாசமாகின.

தீ விபத்துக்கான காரணம் எது என்பது கண்டு பிடிக்கப்படவில்லை என அக்கரைப்பற்று பொலீஸார் தெரிவித்தனர்,

கடைகளில் இருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளதாக மதிப்பிடபட்டுள்ளது. (ஐ-4)

## முச்சந்தி முரளி



உவையள் 'கழகம்' அமைச்சுப் போட்டு பார்லிமேந்திலை கலகம் உண்டாக்குவினம் எண்டு சொல்லுங்கோ......!

## படகுச் சேவை இன்று இல்லை

யாழப்பாணம்,பெப். 1

கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம்,பெப். 1

யாழ். மாவட்ட ரயில்வே, உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் ஜனவரி மாத வவுச்சர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

குமண கப்பல் மூலம்எடுத்து வரப்பட்ட இந்த வவுச்சர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 3 ஆயிரம் ஈழ அகதிகள் திரும்புவர்

கொழும்பு, பெப். 1

கடந்த ஒக்ரோபரில் இந்தியாவில் உண்டான கொள்ளை நோய் காரணமாக தடைப்பட்டிருந்த இலங்கை அகதிகளை நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இம்மாதம் சுமார் 3,000 அகதிகள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

'றெப்பியா' அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இன்னமும் தமிழ் நாட்டில் 120 சேமநல நிலையங்களில் 65 ஆயிரம் இலங்கை அகதிகள் உள்ளனர். (இ-க)

## வெளிநாட்டு செய்தியாளர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம் பெப். 1

சுவிற்சர்லாந்து தொலைக்காட்சி செய்தியாளர் குழு ஒன்று இன்று கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

ஜோகான் சிகாச், பீட்டோ சிராமே ஆகிய இருவருமே இன்று யாழ்ப்பாணம் வரவி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸிலிருந்து திருப்பி அனுப்புவோர் நிலை பற்றி யாழ்ப்பாணத்தில் ஆய்வு

### அந்நாட்டு விரிவுரையாளர் இங்கு வந்துள்ளார்

யாழ்ப்பாணம், பெப். 1

இலங்கையில் யுத்த இடை நிறுத்தம் ஏற்பட்டு சமூக நிலை திரும்பியுள்ளதாகக் கூறி சுவிஸில் தஞ்சம் அடைந்தவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து —

இலங்கை திரும்பும் அகதிகள் எதிர் நோக்கும் பொருளாதார, எதிர்கால சமுதாய நிலை ஆகியன குறித்து சுவிஸில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்காக அந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒஸ்கார் புளுக் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்துள்ளார்.

சுவிஸ் நாட்டில் உள்ள பேசல் பல்கலைக்கழகத்தின் மானிட புவியியல்துறைப் பேராசிரியர் டபிள்யூ. ஏ. காலிகார் இந்த ஆய்வு தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் பாலச்சந்திரனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நேற்று யாழ். வந்து சேர்ந்துள்ள திரு. ஒஸ்கார் புளுக் நாளை காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு வாரத்துக்கு விரிவுரைகள் நடத்த இருக்கிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலுடன் தொடர்பு வைத்தால் எனது பணிகள் பாழாகிப் போய்விடும்

### வடக்கு கிழக்கு ஆளுநர் கொன்சேகா தமிழில் பேட்டி

கொழும்பு, பெப். 1

அரசியல் பற்றி நான் ... பேசப்போவதில்லை. எனக்கு அரசியல் தேவையில்லை. அரசியலை நான் கை கழுவி விட்டேன்.

அரசியலுடன் தொடர்பு வைத்திருந்தால் நான் செய்யத் திட்டமிட்டுள்ள பணிகள் எல்லாம் பாழாகிப்போய் விடும்.

... ஆளுநர் ... பிரான்சேகா ... இலங்கையொலிக்கு தமிழில் அளித்த பேட்டியில் இவ்வாறுகூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

சமாதானம் வரவேண்டும். சமாதானம் இல்லையானால் அபிவிருத்தியும் செய்யமுடியாது. மனிதனின் கஷ்டங்கள் ... பணியிலேயே நான் ஈடுபட வேண்...

சமாதானத்தை கொண்டு வரும் பணியில் நான் ஈடுபடமாட்டேன். அதை அவர்கள் செய்யட்டும்.

தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். விவசாயிகள் தாம் உற்பத்தி செய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சிக்குள் அதிருப்திக் குழு! 40 எம்.பிக்கள் கூடி தனிக் கழகம்

கொழும்பு. பெப். 1

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து ஆறுமாதங்கள் முடிவடைவதற்குள்ளேயே ஆளும் கட்சியில் அதிருப்திக் குழு ஒன்று உருவாகியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இந்த அதிருப்திக் குழுவில் சுமார் நாற்பது எம்.பிக்கள் உள்ளதாகவும், அவர்கள் கட்சி உயர் மட்டங்களில் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட எம்பிக்கள் நாற்பது பேரும் கடந்த வாரம் ஒன்றுகூடி "கழகம்" ஒன்றை அமைத்துள்ளதாக கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொ.ஐ.மு. அரசாங்கத்தைக் காப்பதற்கான முகம் என்று இவர்கள் தமது அமைப்புக்குப் பெயரிட்டாலும் —

இவர்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் அதிருப்தி தெரிவித்தே தமது கலந்துரையாடலை நடத்தியதாக — அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## குருநகர் கடற் பகுதியில் மீனவர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 1

குருநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது

நாவாந்துறையைச் சேர்ந்த செபஸ்தியாம் பிள்ளை ராஜா (18 வயது) குசைராஜா (18 வயது) ஆகிய மீனவர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலில் உள்ள நேரத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது [ஒ-3]

## பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம் வெளியாவது தாமதமாகும்

கொழும்பு.பெப். 1

1993ஆம் ஆண்டு நடந்த ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையின் அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பது தொடர்பான வெட்டுப்புள்ளி விவரம் வெளியாவது மேலும் தாமதமாகும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்தது.

பல்லைக்கழக மருத்துவ பீடங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக நிலவும் குழப்ப நிலை காரணமாகவே வெட்டுப்புள்ளி விவரம் வெளியாவது தாமதமாகி வருவதாகவும் மானிய ஆணைக்குழு தெரிவித்தது.

கடந்த மாத இறுதியில் வெட்டுப்புள்ளி விவரம் வெளியாகும் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முன்னர் தெரிவித்திருந்தது. (ஐ-3-6)

## அமைதிச் சூழ்நிலையை முன்னெடுக்க கோரிக்கை

லண்டன், பெப். 1

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்படும் வரை தற்போதுள்ள அமைதிச் சூழ்நிலையை இரு சாராரும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்

ஐரோப்பிய சமூகம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

கொடி வாரம்
பெப்ரவரி 6 -- 12
"நோய்த்தவர்க்கு தொண்டு செய்வோம்"
நோயாளர் நலன்புரி சங்கம்,
நடுவப் பணியகம்,
572, ஸ்ரேசன் வீதி ரோட்டு சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P' NEW SCIENCE CENTRE

எழிலகம் முன் — யாழ்ப்பாணம்

**95 A/L DAY CLASSES**

(கணித – உயிரியல் பிரிவு)

ஆரம்பம்: **03 - 02 - 95** வெள்ளி 9 a.m.

★ வகுப்புகள் 9 a.m. – 1–30 p.m. வரை நடைபெறும்.

★ விசேட பட்டதாரி ஆசிரியர்களினால் 6மாதத்தில் முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

நிர்வாகி

(சி-474)

## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின்
மூத்த பழைய மாணவரும்,
பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின்
ஆரம்பகால உறுப்பினரும்,
நகைச்சுவை மன்னருமான

ஆசிரியமணி

**ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே. பி.**

அவர்களின் பிரிவு பேரிழப்பாகும்.
அன்னாரின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை மனசில் இருத்திப் பிரார்த்தனை செய்வோமாக.

பண்டிதை பொன், பாக்கியம்
தலைவர்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்,
காரியதரிசி
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.
உரும்பிராய்.

[35962]

## கண்ணீர் அஞ்சலி

**திரு. வைத்திலிங்கம் ஜெகதாஸ்**
(கிராம அலுவலர் - உரும்பிராய் வடக்கு)


முன்னாள் உரும்பிராய்-ஊரெழு விசேட உத்தியோகத்தரும் தற்போதைய உரும்பிராய் வடக்கு கிராம அலுவலரும் ஆகிய திரு. வைத்திலிங்கம் ஜெகதாஸ் அவர்களின் திடீர் மறைவையிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

இங்ஙனம்:
பிரதேசசெயலர்,
செயலக உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்,
கிராம அலுவலர்கள்,
ஊழியர்கள்.

வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

(34958)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



**அமரர் சரவணமுத்து நமசிவாயம்**
(இரத்தினம்)
(மலாயன் பென்சனரும், முன்னாள் சடுதி மரண விசாரணை அதிகாரியும்)

தோற்றம்: 23-01-1905

மறைவு: 02-01-1995

எங்கள் குல தெய்வத்தின் இறுதிக்கிரியை, அந்தியேட்டிக்கிரியை முதலியவற்றில் கலந்து ஆறுதல் அளித்தும், வேண்டிய வேண்டியாங்கு உதவிகள் பல ஆற்றியும் பங்களிப்புச் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவர்க்கும் எமது பகமையான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை இன்று (01-02-1995) புதன்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியை, வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''அமுதசுரபி''
கைதடி கிழக்கு,
கைதடி.

[34967]

## ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலயம்
நல்லூர்

### முக்கிய அறிவித்தல்

இத்தால் அறியத்தருவது மேற்படி ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் குடி இருப்பவர்கள் ஆலயத்தின் நிர்வாகத்தின் முன் அனுமதி இன்றி காணிகளை விற்கவோ பிற் குத்தகை மாற்றி கொடுக்கவோ இயலாது. மேற்படி ஆலயக் காணியில் குடியிருப்போர் தாம் குடியிருக்கும் காணி தேவையில்லாவிடில் அதனை தேவஸ்தானத்திடம் ஒப்படைக்கவும் ஆலய காணியில் குடியிருப்பவர்கள் குத்தகை ஆவணத்தை சமர்ப்பித்து. குத்தகையைப் புதுப்பிக்கவும். புதுப்பிக்கத் தவறுவோர் அதிலுள்ள குத்தகை உரிமையை இழந்தவராகக் கணிக்கப்படுவர்.

திருமதி இ. இராமலிங்கம்
ஆலய முகாமையாளர்

(34793)

## முதியோர் இல்லம்

### மெதடிஸ்த திருச்சபை புத்தூர்

மேற்படி இல்லத்தில் சேர விரும்பும் முதியோரான பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைச் சேர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி **8-2-95**

முகாமைக்குரு

''லொக்வூட் ஹவுஸ்''
9, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம்.

[சி/472]

## தவறிவிட்டது

30 – 01 - 1995 இரவு 7-30 மணியளவில் கைதடிச் சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் கோப்பாய் வீதியில் பெறுமதி மிக்க மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகம் உட்பட வேறுசில பொருள்களுடன் உரப்பை ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை வங்கி, பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[34964]

## பிற்போடப்பட்டுள்ளது

யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி கலை, வர்த்தக மாணவர் மன்றத்தினரால் 01 – 02 – 1995 இல் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 15 - 02 - 1995 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

நன்றி

– மன்றத்தினர்.

[7883]

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவர்
நி. தண்டாயுதபாணியின்
தந்தையாரான

**சின்னத்துரை நித்தியானந்தவேல்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் எமது நண்பருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

14 ஆம் அணி மாணவர்கள்
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[34977]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1 - 01 — 1924



உதிர்வு: 12 — 02 — 1994

**அமரர் நாகலிங்கம் தம்பிஐயா**
(மானிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து எங்களுக்கோர் நல்வழிகாட்டி வாழவைத்த தெய்வமே உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் போகாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

கோணாவளை ஒழுங்கை
துர்க்கை அம்மன் கோவிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(34965)

# ஸ்ரீலங்காவில் விரைவில் சமாதானம் ஏற்படும் என்கிறார் பகவான் சாயிபாபா

யாழ்ப்பாணம், பெப் 1

ஸ்ரீலங்காவில் விரைவில் சமாதானம் ஏற்படும்.

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா கடந்த மாத ஆரம்பத்தில் புட்டபர்த்தியில் ஸ்ரீலங்கா உட்பட 15 நாடுகளிலிருந்து வந்த பக்தர்களுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முன்னாள் அரச அதிபரும் அகில இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சமித்திகளின் மத்திய குழு இணைப்பாளருமான திரு. எஸ். சிவஞானத்தை ஸ்ரீலங்காவில் சிறந்த சாயி ஸ்தாபனப் பணிக்காகப் பகவான் சாயிபாபா பாராட்டினார்.

பகவான் சாயிபாபா திரு. சிவஞானத்தை ஆசீர்வதித்ததோடு, அவருக்கு வைர மோதிரம் ஒன்றையும் அன்பளிப்புச் செய்தார். தமது வலது கரத்தால் அவரை ஆசீர்வதித்த போது பகவானின் வலதுகர உள்ளங்கையில் மோதிரம் வந்தது.

அளவு பார்த்துச் செய்தது போல் திரு. சிவஞானத்தின் மோதிர விரலுக்குச் சரியான அளவுடையதாக இந்த மோதிரம் அமைந்தது.

மானிப்பாய் சத்திய சாயி கேந்திரத்தில் வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி ஸ்தாபனங்களின் தொண்டர் பயிற்சிக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய போது திரு. சிவஞானம் இந்த பாபாவின் வைர மோதிரக் கதையைக் கூறினார்.

[க]

## அராலியூடாக மூளாய்க்கு மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், பெப். 1

மூளாயில் இருந்து யாழ் நகருக்கு புதிய மார்க்கமாக மினிபஸ் சேவை ஒன்று இன்று முதல் நடத்தப்படவுள்ளது.

யாழ். — மூளாய், யாழ். — மாதகல் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரால் இந்த மினிபஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு மூளாயில் இருந்து புறப்படும் மினிபஸ் மூளாய் வீதி — மாவடி — வட்டுக்கோட்டை கொட்டைக்காடு, அராலி அம்மன் கோவில் வீதி ஆகிய பகுதிகள் ஊடாக செட்டியார் மடம், துணவி, நவாலி ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கிருந்து யாழ்நகரை வந்தடையும்.

பின்னர் பிற்பகல் 1-55 மணிக்கு யாழ் நகரிலிருந்து இதே பாதைகள் ஊடாக அது மூளாயைச் சென்றடையும்.

[ஐ]

## சில்லையூர் செல்வராசனுக்கு விருது

கொழும்பு, ஜன. 31

சில்லையூர் செல்வராசன் உட்பட நான்கு சாதனையாளருக்கு யப்பான் சிறீலங்கா நட்புறவுக் கலாசார நிதியம் தத்தம் துறைகளில் அவர்கள் ஆற்றியுள்ள சேவையைக் கௌரவித்து 50 ஆயிரம் ரூபா பணமுடிப்பையும் விருதுகளையும் வழங்கியுள்ளது.

நாடகம், சினிமாப் பாடல்கள் முதலிய துறைகளில் அவர் நிகழ்த்திய சாதனைகளுக்காக சில்லையூர் செல்வராசன் கௌரவிக்கப்பட்டார்.

திரு. சரத் சூரசேன (வரைபடம்), உபேகாவஜிராணி (நடனம்), பிரேமசிறி கேமதாச (இசை) ஆகியோரே கௌரவிக்கப்பட்ட மற்ற மூவர் ஆவர்.

விருது வழங்கும் வைபவம் கடந்த 25 ஆம் திகதி கொழும்பு றெனங் சான்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

(க)

## ஜே. வி. பி. சுவரொட்டி போராட்டம்

கொழும்பு, பெப். 1

அரசுக்கு எதிராக ஜே. வி. பி. அமைப்பு சுவரொட்டிப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் உரிமைகளை ஆதரித்து கட்டுநாயக்கா ஜாஎல, சீதுவை பகுதிகளில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. [இ-3]

## அனுருத்த சுகவீனம்

கொழும்பு, பெப். 1

பாதுகாப்பு பிரதிஅமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்தை கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான கடும் இருமல் காரணமாக அவரது விலா எலும்புகளில் ஒன்றில் முறிவு ஏற்பட்டிருப்பதாக அவரது உதவியாளர்ஒருவர் தெரிவித்ததாக ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டது.

இதனை அடுத்து அமைச்சர் அனுருத்த பொது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துள்ளார்.

[ஐ-க]

## கப்பல் கட்டணத்தை குறைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை கப்பலில் தருவிப்பதற்கு வசதியாக பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை குறைத்து தருமாறு யாழ். அரச அதிபரை கேட்டுள்ளது.

கப்பல் கட்டணத்தை குறைப்பதன் மூலம் பொருள்களைக் குறைந்த விலையில் விற்க முடியும் என சமாசம் அரச அதிபருக்கு சுட்டிக் காட்டியுள்ளது. (க-17)

## தஸ்லீமா நஸ்ரீனுக்கு சுவீடிஷ் இலக்கியப் பரிசு

சுவீடிஷ் இலக்கியப் பரிசு இம்முறை பங்களாதேஷின் பெண் எழுத்தாளரான தஸ்லீமா நஸ்ரீனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக 'உப்சலா' பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

சுவீடிஷ் எழுத்தாளரான 'கென்பான்ட்' டினால் ஸ்தாபிக்கப்பட்ட ஹண்டேஷனால் இந்தப்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

4000டொலர்கள் பெறுமதியான இப்பரிசு பேச்சுச் சுதந்திரத்துக்காக உழைத்து வரும் ஒருவருக்கு இரு வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படுகின்றது.

பரிசு பெறும் 32வயதான எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன் பங்களாதேஷ் முஸ்லிம் தீவிரவாதிகளின் கொலைப் பயமுறுத்தல்களுக்கு அஞ்சி சுவிடன் நாட்டில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வருகிறார்.

(இ-14)

## நெல் அறுவடை

வலிகாமம் மேற்குப்பகுதியில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

வயல்களில் வெள்ளம் நிற்பதையும் பொருட்படுத்தாமல் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்து வருகின்றனர்.

விவசாயிகள் அறுவடை செய்து மேட்டு நிலங்களில் வைத்து சூடு அடிக்கின்றனர்.

(இ-17)

## பதவி வெற்றிடம்

**எழுதுவினைஞர் பதவி:**

வயது: 25 — 40 வரையும்
பால்: பெண்

தகைமை:

கல்விப்பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் சித்தியுடன் தமிழ் தட்டெழுத்து — சுருக்கெழுத்தில் தகைமை உள்ளவர் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது.

**05 - 02 - 95** ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை நேரிலோ தபால் மூலமோ சேர்ப்பிக்கவும்.

செயலாளர்,
**கலை ஊடக இணையம்,**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-471]

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் வடக்கு, தெற்கு பிரதேச மக்களுக்கு நன்கு அறிமுகமான உதவி அரசாங்க அதிபரும், சிறந்த சமூக சேவையாளருமான

**திரு. வைத்திலிங்கம் இராசையா**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளமையால், அவரது உயர்ந்த சேவையைப் பாராட்டி கௌரவிக்கு முகமாக 05 - 03 - 1995 ஆம் திகதி சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பாராட்டு விழாவிலும், விருந்துபசாரத்திலும் தங்கள் பங்களிப்பையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க விரும்புவோர் பின்வருவோரில் ஒருவருடன் 18 - 02 - 1995 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

திரு. எஸ்.பி. சிவஞானம்,
சட்டத்தரணி,
சுன்னாகம்.

திரு. க. கனகராசா,
ஓய்வுபெற்ற தபாலதிபர்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

திரு. சேதுவிபுலானந்தா,
ஓய்வுபெற்ற படம் வரைஞர்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

திரு. செ. சச்சிதானந்தம்,
கிராமசேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலர், வலி.வடக்கு காரியாலயம்,
தெல்லிப்பளை.

– விழா அமைப்புக் குழு

[சி/475]

O/L

விஞ்ஞானம்

MR. J.R. சூரி

பிரிவு II ஆரம்பம்

5-2-95 SUN, 6.30 a.m.

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

Yr. 10

SAT, SUN 8.00 a.m.

SHAMROCK

யாழ். சுண்டுக்குளி

[34966]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக தடுப்பு முகாம்களில் உள்ள ஈழப் போராளிகளை அனுப்ப முடிவு

கொழும்பு, பெப். 1
தமிழகத்தில் உள்ள விசேட தடை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 600 இலங்கைப் போராளிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 140 போராளிகளும் அடங்குவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக எடுத்த முடிவை நடைமுறைப்படுத்த விசேட திட்டம் ஒன்றை வகுக்கும் பணியில் தமிழக அரசு தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் அந்த செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த பல வருடங்களாக இலங்கைப் போராளிகளை தமிழக அரசு மத்திய அரசின் அனுமதியுடன் விசேட தடுப்பு முகாம்களில் வைத்து பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது. [இ-3]

## பட்டதாரிப் பயிலுநர்கள் கண்டியில் மறியல் போர்

கொழும்பு, பெப். 1
நிரந்தர நியமனம் வழங்கக்கோரி 3 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்கள் நேற்றுமுன்தினம் கண்டியில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக தலதா வீதியில் இந்த மறியல் போராட்டம் நடந்தது.

கண்டிப் பகுதியில் உள்ள பிரதேச சபை, பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் பணியாற்றும் இவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும், பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்றும் கோரினர். [இ 3]

## படம் எடுத்த இளைஞர் புலிகளின் ஆளாம்

### பொலீஸார் கூறுகின்றனர்

கொழும்பு, பெப். 1
ஹொரகொல்ல பண்டாரநாயக்கா சிலை அருகில் கைதான தமிழ் இளைஞர் விடுதலைப் புலிகளின் மூன்று தலைவர்களால் கொழும்புக்கு அனுப்பப்பட்டவர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரகொல்லவில் உள்ள எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிலையைப் படம் எடுத்துக்கொண்டிருந்தபோது இவர் கைதானது தெரிந்ததே.

கிளிநொச்சியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும்—

விடுதலைப் புலிகளின் மூன்று தலைவர்களால் இவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டமை தெரிய வந்துள்ளதாகவும்— பொலீஸார் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ஐக்கிய தேசியக் கட்சி மக்களின் சொத்து-ரணில்

கொழும்பு, பெப் 1
"ஐ. தே. க. தனி ஒருவரின் சொத்து அல்ல அது மக்களின் சொத்து. அதை வளர்க்கவேண்டிய பொறுப்பு மக்களிடம்தான் உண்டு"

ஐ. தே. க. தலைவர்ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. கடந்த தேர்தல்களில் தோல்வியைத் தழுவிய பின்னர் கட்சியை புனரமைக்கும்பணியில் ஈடுபட்டுள்ள அவர் அனுராதபுரத்தில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். [இ-3]

## 15,000 பரீட்சார்த்திகள் மீளாய்வுக்கு விண்ணப்பம்

கொழும்பு, பெப், 1
கடந்த ஆகஸ்ட்டில் நடந்த ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையின் முடிவுகளை மீளாய்வு செய்ய 15 ஆயிரம் பரீட்சார்த்திகள் விண்ணப்பம் அனுப்பியுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பரீட்சையில் ஒன்றரை லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்றும்—

கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறையே கூடுதலானவர்கள் மீளாய்வுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும்— பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது

## மன்னார்த்தீவு - கற்பிட்டி
## வாரம் 6 நாட்கள் கப்பல் சேவை நடக்கும்

மன்னார்த் தீவுக்கும் கற்பிட்டிக்கும் இடையில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் கப்பல் சேவையை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் இருந்து செயற்பட விருக்கும் இந்த சேவையில், 150 பயணிகள் செல்லக் கூடிய கப்பல் ஈடுபடுத்தப்பட உள்ளது.

தற்சமயம் வாரத்தில் மூன்று நாட்களே கப்பல் சேவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (இ-3]

## மன்னர் அலெக்ஸாண்டரின் கல்லறை கண்டுபிடிப்பு!

புதுடில்லி, பெப். 1
கிரேக்க மாமன்னர் மகா அலெக்ஸாண்டரின் கல்லறை எகிப்துக்கு அருகே உள்ள பாலைவனப் பசுஞ்சோலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

கடந்த நான்கு ஆண்டு காலமாக எகிப்தில் ஆய்வினை நடத்தி வந்த கிரேக்க ஆய்வாளர் குழு ஒன்றே கல்லறையைக் கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் அலெக்ஸாண்டரின் சடலம் எங்கு புதைக்கப்பட்டது என்ற வரலாற்றுப் புதிர் விடுவிக்கப்பட்டுள்ளது.

மசிடோனிய மாவீரனான அலெக்ஸாண்டர் பபிலோனியாவில் இறந்தார். அவரது சடலம் அங்கிருந்து சிரியாவுக்கும் பின்னர் எகிப்துக்கும் கொண்டு செல்லப்பட்டதாக வரலாற்று நூல்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவரது கல்லறை எங்குள்ளது என்பது பெரும் புதிராகவே இருந்து வந்தது. [ஐ-5]

## புலிகளின் குரல் வானொலியில்

**01 — 02 — 1995**
**புதன் இரவு**

- ★ 8-01 — குயிலோசை வேலணையூர் சுரேஸ் எழுதிய "இது உழைப்பவர் தேசம்"
- ★ 8-20 — ஏர்முனை "வீட்டுத் தோட்டம்" உரைச் சித்திரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — சந்திரா தனபாலசிங்கம் எழுதிய "தெளிவு"
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**02 — 02 — 1995**
**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**புதன் மாலை**

- ★ 5-00 — மணிக்கு ஒலிபரப்பு ஆரம்பம்
- ★ 5-01 - சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 —உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு
- ★ 6-30 — மணிக்கு மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவுபெறும்

## இரண்டாயிரம் பயிலுனர்கள்

யாழ்ப்பாணம், பெப். 1
தேசிய தொழில் பயிலுனர் சபை அடுத்த வருடம் 2,000 பயிலுனர்களை பயிற்சியில் ஈடுபடுத்தவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய பயிலுனர் சபை மேற்கொண்டு வருகின்றது. (க-17)

## கேணியில் மூழ்கி சிறுவர்கள் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 1
கோயிற் கேணியில் இறங்கி மீன்பிடித்து விளையாடிய சகோதரர்களான சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் கேணியில் ஞாயிறன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

வட்டுக்கோட்டை மாவடியைச்சேர்ந்த நோபாலசிங்கம் சிவருபன் [வயது 9] அவரது சகோதரன் நோபாலசிங்கம் தினேஷ் [வயது 7] ஆகியோரே இறந்தவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை மாணவர்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இரு சடலங்களும் மரணவிசாரணையின் பின் தந்தையிடம் கையளிக்கப்பட்டன. [இ-15-12-161]

## வாழும் காலத்தில் கலைஞர்களை கௌரவிப்பது போலியானதாகும்

### எழுத்தாளர் நினைவுக் கூட்டத்தில் உரை

கொழும்பு, பெப். 1
"ஒரு கலைஞன் வாழும்போது கௌரவிக்கப்படக் கூடாது. அவ்வாறு அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள் என்றால் அது அவர்களின் செல்வாக்கைக்கண்டு அரசியல்வாதிகளாலும் அமைச்சர்களாலும் அளிக்கப்படுகின்ற போலியான கௌரவமாகும்".

அண்மையில் மட்டக்களப்பில் நடந்த மூத்த சிறுகதை எழுத்தாளர் பர்ஹிம் பித்தன் ஜே. எம். எம். ஷாவ்ன் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய பிரபல தமிழறிஞர் வித்துவான் [illegible] கமலநாதன் [illegible] கருத்தைத் தெரிவித்தார்.

கலைஞன் வாழும் காலத்தில் அவனுக்கு அமைச்சர்களினாலும், அரசியல்வாதிகளாலும் அளிக்கப்படும் கௌரவம் போலியானதாகும். எனவே அவன் மறைந்த பின் போற்றப்படுவதே சரியானதாகும் — என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக தமிழ்ப் பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுருவும் அந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

ஒரு நல்ல படைப்பாளிக்குப் பட்டங்களும் விருது [illegible] தன் கொடுக்கின்ற பட்டங் [illegible] ஒரு படைப்பாளி மதிக்கப்படுகின்றான் என்பதல்ல. அப்படியானால் கம்பன் வாழ்ந்த அதே காலத்தில்தான் ஒட்டக்கூத்தனும் வாழ்ந்தான். ஆனால் ஒட்டக்கூத்தன் அரசவைக் கவிஞன். ஆனால் கடைசியில் கம்பனும் கவிச்சக்கரவர்த்திதான். ஒட்டக்கூத்தனும் கவிச்சக்கரவர்த்திதான்.

ஒட்டக்கூத்தனுக்கு அரசு கொடுத்த கவிச்சக்கரவர்த்தி பட்டம் காற்றிலே பறந்து விட்டது.

ஆனால் மக்கள் கொடுத்த கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் கம்பனுடன் வாழ்கிறது. பட்டங்களை மக்கள் தான் கொடுக்கவேண்டும்— என்றார். [ஐ 5]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**கனகரத்தினம் ஜெகரூபி**
(ஆத்தை)

அன்னையின் கையில்: **04 — 11 — 1980**
ஆண்டவன் காலில்: **24 — 01 — 1993**

பொன் விளக்கே - எங்கள்
பூஞ்சிட்டே அழியாத கலையே - ஆத்தை
புழுதியிலே உனைத்தள்ளி
விட்டயமன் கொடியவன்
கண்ணிழந்த நிலையானோம்
கருத்தையும் இழந்தோம்
காணுமிருள் மாயையிலே
உன் நினைவே மிச்சம் - ஆத்தை

என்றும் உன் நினைவில் வாடித் துடிக்கும்;
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன்மார், அத்தான்மார்,

இல. 605/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [34959]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 21 — 06 — 1931



உதிர்வு: 02 — 01 — 1995

**அமரர் கந்தையா சிவபாதம்**
(நல்லூர் கிராமசபை நிர்வாக உத்தியோகத்தர்)

03-01-1995 அன்று நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அஸ்திசங்கமம் 30-01-1995 திங்கட்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்றது. தென்புலத்தார் கடன் விருந்தோம்பல் இன்று (01-02-1995) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சிவசக்தி வாசம்"
20 அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [34953]

---

# இசையரசு

## பட்டம் பெறவிருக்கும் பழம்பெரும் தவில் மேதை லயஞான பூபதி திரு. பொ. பழனிவேல்பிள்ளை

அவர்கள்

கலைத்துறையிலே அரசியல் ஆதிக்கம் நிலவாத ஒரு கால கட்டத்தில், இங்கு திருவிழா சீசன் என்று ஆரம்பித்து விட்டால் இந்திய நாதஸ்வர தவில் வித்துவான்கள் வரவழைக்கப்படுவார்கள். அந்தக்காலம் இசைப்பிரியர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி தருங்காலமாக அமையும். ஆலயங்களிலே பக்தர்கள் என்று வருவோரைவிட கலா ரசிகர்களே கூடுதலாக வருவார்கள். விழாக்காலங்களில் நமது நாட்டிலும் ஆரவாரமிருக்கும் இந்தியக் கலைஞர்களோடு அளவளாவிப் பழகுவதற்கும் அவர்களது இசைத் திறமையை அனுபவிப்பதற்கும் யாழ்ப்பாணத்து மக்களுக்கு அளவிலாத ஆர்வமிருக்கும்.

அப்படி வருகின்ற அந்த மேதைகளோடு நம் நாட்டு மேதைகளாகப் பிரகாசித்த சில வித்துவான்களையும் கலைத்துறையில் மோதவைத்து ரசிப்பதில் நம்மூர் மக்கள் கைதேர்ந்தவர்கள் என்பதும் நாமறிந்த உண்மை.

மூளாய் நாதஸ்வர மேதை திரு. முருகையா பிள்ளை, சாவகச்சேரி வித்துவான்களான திரு. சண்முகசுந்தரம், திரு. அப்புலிங்கம்பிள்ளை, திரு. அண்ணாசாமிப்பிள்ளை, மாவிட்டபுரம் இராசா உருத்திராபதி சகோதரர்கள் என்று இன்னும் பலர். நாதஸ்வரத்திலும், மூளாய் ஆறுமுகம்பிள்ளை காமாட்சி சுந்தரம்பிள்ளையோடு இன்னும் சிலர் தவில் வித்துவான்களாகவும் சிறந்து விளங்கினர். அந்த வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் நமது மதிப்புக்குரிய திரு. P. பழனிவேல் அவர்கள். நமது வித்துவான் அவர்கள், இந்திய வித்துவான்களுக்கு ஈடுகொடுத்து இணையாகச் சிறந்து விளங்கினார்.

இவர் காமாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தவில் வாசிக்கக் கற்றுக் கொண்டார். நல்லூர் மாணிக்க நாதஸ்வர வித்துவான் திரு. மாணிக்கம், திரு. அண்ணசாமி, மாயவரம் சண்முகசுந்தரம்பிள்ளை, திருவெண்காட்டு சாரங்கபாணிப் பிள்ளை, நல்லூர் (மூளாய்) முருகையாபிள்ளை, சாவகச்சேரி திரு. அப்புலிங்கம்பிள்ளை, மாவிட்டபுரம் திரு. இராசா போன்ற வித்துவான்களுக்கும் இன்னும் பல பிரபல்யம் வாய்ந்த வித்துவான்களுக்கும் தவில் வாசித்து மெருகேற்றியவர்.

இவ்வளவு திறமைகள் இருந்தும், மிக அடக்கமானவர், அமைதியானவர், பண்பாளர், அதிகம் அலட்டிக் கொள்ளாதவர் என்று எத்தனையோ பண்புகள் அவரிடம் இருந்தாலும், அவருடைய இந்தச் சிறப்புக்கள் பேச்சளவில் மட்டும் பேசப்பட்டு வந்தன. அப்படிப்பட்ட இப் பெரியாரை கௌரவிப்பதில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் மனநிறைவோடு பெருமையும் அடைகிறது.

இன்னும் பல்லாண்டு சிறந்து வாழ்க வென அவரை வாழ்த்துகிறோம்.

**— அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்**

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம்
**அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் நிகழ்ச்சிகள்**

**01 – 02 – 1995 புதன்கிழமை**
**முதலாம் நாள் நிகழ்ச்சிகள்**

மாலை 5.00 மணி **மங்கள இசை**

ஈழ நல்லூர்
திரு. மு. பிரேமானந்
திரு. ந. இராஜேஸ்வரன் ) — நாதஸ்வரம்
திரு. R. ஆனந்தகணேசன்
திரு. மு. சுதானந்தன் ) — தவில்

6-00 மணி **பட்டமளிப்பு விழா**

★ தலைவர்
வேணுகானமணி திரு. அ. நவசிவாயம் அவர்கள்
(யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத் தலைவர்)

★ ஆசியுரைகள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)
பிரம்மஸ்ரீ கு. குமாரக் குருக்கள்
(நல்லூர் பண்டாரக் குளம் விநாயகர் ஆலயம்)

37ஆம் ஆண்டுத் தமிழிசை விழாத் தலைவர்
வண்ணார்பண்ணை பிரபல தவில வித்துவான்
திரு பொ. பழனிவேல் (சின்னப்பழனி)
அவர்களுக்கு
"இசையரசு"
என்ற பட்டம் வழங்கிப்
பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்

★ கௌரவ விருந்தினர்கள்
திரு க. [illegible]ணராசா அவர்கள்
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)
கலாநிதி மரிய சேவியர் அடிகள்
(இயக்குனர். யாழ் திருமறைக் கலா மன்றம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு இ ம. அன்பரசன் அவர்கள்
(துணைப் பொறுப்பாளர்,
கலை. பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

★ பாராட்டுரை
இசையரசு திரு V K. குமாரசாமி அவர்கள்
இசைப்பேரறிஞர் திரு K R நடராசா அவர்கள்

★ இசை விழாத் தலைமையுரை
இசையரசு திரு. பொ. பழனிவேல்
(சின்னபபழனி) அவர்கள்

7-00 — 8-15 மணி **நாதஸ்வர கானா கலாநிதி**

திரு. N K பத்மநாதன்
திரு. R. சண்முகநாதன் ) — நாதஸ்வரம்
இசையரசு திரு. பொ. பழனிவேல்
(சின்னப்பழனி)
இளந்தவில் வித்துவான்
திரு. P முருகதாஸ்
திரு. R. முருகானந்தம் ) — தவில்

[34956]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு போத்தல் பால் எடுக்கும் யமுனாபாரி ஆடும், அதன் இரண்டு கடாக்குட்டி களும், குட்டி ஈனும் பருவத்தில் இருக்கும் சனல் ஆடும் விற்பனைக்குண்டு. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [34926]

45 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. குகன், 15/2, ராதா ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (34903)

நல்ல நிலையிலுள்ள மூன்று கோழிக்கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: விக்டர் அன்ரனி, இல. 117/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். [34954]

Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. இல. 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம். [34952]

பனசொனிக் [Panasonic] Digital - AV - mixer - WJ - AVE - 5] நிக்கோன் FM - 2 ஸ்ரில் கமரா AE - 1 கனோன் ஸ்ரில் கமரா. MX - 10 பனசொனிக் மிக்ஸர். தொடர்பு: றீகல் வீடியோ, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. [8217]

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் இரண்டு பரப்பு வீடும், காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி லலிதாதேவி செம்பாட்டு லேன் (வீரவேங்கை ஜெயராஜ் வீதி), பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகில்) (34919)

### விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் – சைவசித்தாந்தம் உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு வேத பாரம்பரியமும்; சைவ சித்தாந்தமும் இந்து தர்மமும்; வர்ண தர்மமும். ஆசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். (34885)

### றபர் சீல்

3 மணி நேரத்தில் றபர்சீல் வேலை செய்து பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஸ்ரிக்கர் லேபள் விளம்பரகலர்கள் புளொக் தரமான முறையில் செய்து கொடுப்பவர்கள் மீண்டும் யாழ். நகரில் செல்வா றபர் சீல் தயாரிப்பாளர், 230, கே. கே. எஸ். வீதி, மேல்மாடி, யாழ்ப்பாணம். [8218]

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டையும், ஒய்வூதிய அறிமுக அட்டையும், வங்கி சேமிப்புப் புத்தகமும், மூக்குக்கண்ணாடியும் 27-1-95 இல் கிழக்கு அரியாலைக்கும் தபால்பெட்டி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ம. பூபாலசிங்கம், இல. 219/2, கண்டி வீதி, அரியாலை. [34949]

### தேவை

வீட்டில் வைத்து சிங்களம் கற்பிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தேவை. உடன் தொடர்பு கொள்க: இல. 960, மே/பா உதயன். [சி-338]

### மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ 43 வயது, மாதம் 5000/- சம்பளம் பெறும் குடிப்பழக்கமற்ற அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு: இல. 755, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34955]

### கடல் கோட்டை

செங்கை ஆழியானின் வரலாற்று நாவல் [விலை 70/-] இந்த மாத மலிவு விலை 35/- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (34932)

### காவேரி சீயாக்காய் பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனம், 80% சீயாக்காயும், 20% இயற்கைப் பொருள்களும், சேர்த்து தயாரிப்பது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல், காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் கிடைக்கும். [34909]

---

## 'A' LEVEL CENTRE

1st. LANE
POINT - PEDRO ROAD,
JAFFNA.

**சிங்கள வகுப்பு**

ஆசிரியர்:
**Miss A. ALISTA**

ஆரம்பம்:
**03 - 02 - 1995**

FRI. & MON.
4-30 — 5 30p.m.

[சி-335]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

94 பரீட்சையில் தோற்றியவர்களுக்கான

**95 மீட்டல் DAY CLASS**

பொருளியல்:-
திரு. இராஜேஸ்வரன் 8.30 — 9.30

கணக்கியல்:-
திரு. கலைச்செல்வன் 12.30 — 2.00

அளவையியல்:-
திரு. A. பிரபா 11.00 — 12.00

வர்த்தகம்:-
திரு. சிவப்பிரகாசம் 9.30 — 11.00

✶ வாரத்தில் 4 நாட்களும் நடைபெறும்

[சி/464]

---

## உடுவில் மகளிர் கல்லூரி

## பட்டப்படிப்புகள் பிரிவு

**B.A. (Part-I), B.A. (Final)**

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

விரிவுரைகள்

ஆரம்பம்: **01.02.95** பி.ப. 3 மணி

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

— நிர்வாகி —

[சி/467]

---

## வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதி கோயில்

(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்)

வண்ணை காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மேற்படி ஆலய ராஜகோபுரத்தை, அதன் அமைப்பில் மாற்றம் செய்யாது, திருத்தி, வர்ணம் பூசுவதற்கு, அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15 - 02 - 95 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் கோபுரத்தைப் பார்வையிட்டு தமது அனுபவம், வேலைக்கு தேவையான பொருள்கள் கூலி விவரங்கள் முதலியவற்றை கோபுர மாதிரி பட அமைப்புடன், சமர்ப்பிக்கவும். மேலும் தேவைப்படும் விவரங்களை தயவு செய்து கோயிலில் காரியாலயத்தில் பூசை நேரத்தில் நேரடியாக முகாமையாளரிடம் அறிந்து கொள்ளவும்.

இங்ஙனம்:
— தர்மகர்த்தா சபை.

(34950)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்: 07 — 04 — 1910

ஆண்டவன் அடியில்: 05 — 01 — 1995

திருமதி
**வள்ளிப்பிள்ளை விநாயகம்**

அன்பின் திருவுருவே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, எமது இல்லத்தில் 3 - 2 - 95 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

''பத்ம வாசா'',
கந்தஉடையார் வீதி,
புலோலி மத்தி,
பருத்தித்துறை.

(34925)

---

## கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் சுவாமி கோயில்

## வருடாந்த அலங்கார உற்சவம்

நிகழும் பவ வருஷம் தை மாதம் 19ஆம் திகதி நாளை (02 - 02 - 1995) வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் சங்காபிஷேகத்துடன் விழா ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும்
இரவு 7-00 மணி முதல் 8-00 மணி வரை

**தமிழருவி த. சிவகுமாரன்**
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்
ஆசிரியர் யாழ் / இந்துக் கல்லூரி)
அவர்களால்

தெய்வீகப் பேருரைகள் நடைபெறும்.

பொருள்: **பெரியபுராணம்**
(தொடர் சொற்பொழிவு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— ஆலய பரிபாலன சபை.

விளம்பர அன்பளிப்பு:
முருகன் கபே.
திருநெல்வேலிச் சந்தி.

[34947]

---

## ★ திருமண அழைப்பு ★

உ
விராட் விஸ்வப் பிரம்மணே நம;

அன்புடையீர்!

நிகழும் பவ வருஷம் தைத் திங்கள் 20ஆம் நாள் (03 – 02 – 1995) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-06 முதல் 10-36 மணிவரையுள்ள ★ சுபமுகூர்த்த வேளையில், ★

| எமது ஏகபுத்திரன் திருநிறை செல்வன் **கணபாலன் (சந்திரன்)** (டோகா) அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **உதயமலர் (உதயா)** (ப. நோ. கூ. ச. கைதடி) அவர்களுக்கும் |
|---|---|

மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழத் திருவருள் கூட்டியிருப்பதால், அத்தருணம் தங்களையும் குடும்ப சமேதரராக வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து மகிழ்வுறவூடாடிச் சிறப்பிக்குமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

(தனிப்பட்ட அழைப்புவிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

தங்கள் நல்வரவை நாடும்:

இ. சின்னத்தம்பி (சின்னப்பு) குடும்பத்தினர்,
விமன்காமம், தெல்லிப்பழை.
தற்போதைய முகவரி:- நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

க. சங்கரலிங்கம் குடும்பத்தினர்,
தச்சன்தோப்பு,
கைதடி.

— இருவீட்டார் அழைப்பு —

[34935]

---

## ★ திருமண அழைப்பு ★

உ

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் தைத் திங்கள் 21ஆம் நாள் (04-02-1995) சனிக்கிழமை அதிகாலை 6-35 தொடக்கம் 7-06 வரையுள்ள மகரலக்கின சுப முகூர்த்த வேளையில்,

| திரு. திருமதி மருதலிங்கம் தம்பதிகளின் புத்திரன் திருவளர் செல்வன் **தயாளன்** (வே.சி.ம.களஞ்சியம்) அவர்களுக்கும் | திரு. திருமதி வீரவாகு தம்பதிகளின் புத்திரி திருவளர் செல்வி **ரஜனி** அவர்களுக்கும் |
|---|---|

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து, அன்று மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

✶ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ✶

வே. சி. மருதலிங்கம்
கனகசபை வீதி,

அ. வீரவாகு குடும்பத்தினர்.
அராலி தெற்கு,
அராலி.

(8220)

---

## வெளிவந்துவிட்டது!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் செய்த

**சைவ வினா - விடை**

(முதற் புத்தகம்)

தோத்திரத் திரட்டுடன்

கிடைக்கும் இடம்;

**சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,**
450, காங்கேசன்துறை சாலை
யாழ்ப்பாணம்.

[34939]

---

## தில்லை சோதிட நிலையம்


கடலங்குடி சோதிட சாஸ்திர கல் பெற்றவரும், சோதிட ஆரியில் பயிற்சி திரு. S. பார் மேதை அவர்களின் ம திநசாரதி செல்வி ஜெ. ணவியுமான அவர்களிடம் சோதி தில்லையம்பலம் பொருத்தங்கள் க் குறிப்புகள், திருமணப் உங்கள் வ என்பவற்றில் நற்பலன் அறிந்து ழ்வை முன்னேற்ற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

**135, பருத்தித்துறை வீதி,**
(நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக)

(34930)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தையா இளையதம்பி**
(அதிபர், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை)

மண்ணில்: **1936—03—23**

விண்ணில்: **1995—01—02**

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் சமூகத்தின் அதிபதியாய்
விளங்கிய எம் ஆசானே
உங்களை உருக்கி எங்களை வாழவைத்த
தெய்வமே! இளையவரே!
நின் சேவைகள் பெற ஒன்றும் உம் இல்லம் நாடும்
நிலையினைக் கண்டு மௌனமாய் தவிக்கின்றோம்
நேசமுடன் ஒரு வார்த்தை சாறாது
மின்னலென விண் நாடிச் சென்றதேனோ
கண்ணுக்குள் இருக்கும் கருணை வடிவம் — இன்று
தடுகளவும் குறையவில்லை நெஞ்சினிலே
நடமாடும் வீட்டினிலே படமாகி விட்டீர்களே!

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;

மனைவி, மகன்,
உறவினர்கள்.

''மிதிலை''
கைதடி – நுணாவில்,
சாவகச்சேரி.

(34948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பூநகரிப் பாதை

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களின் நான்காவது கட்டம் தாமதம் அடைகிறது.

இந்தத் தாமதத்துக்கும், தடங்கலுக்கும் பிரதான காரணம் பூநகரி—சங்குப்பிட்டி பாதையை திறந்துவிடுவதில் அரசு காட்டும் தயக்கமே.

அரசாங்கத்தின் இந்தத் தயக்கத்துக்கு இராணுவத்தினரே பின்னுக்கு நிற்கிறார்கள் என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை.

பூநகரி முகாமை, படையினர் பல தியாகங்கள் செய்தே கைப்பற்றினர். அத்தகைய ஒரு முகாமை, ஒரே நாளில் முற்றாக— ஒரே தடவையில் — அகற்ற முடியாது, வாபஸ்பெற முடியாது— என்ற பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டனின் நிலைப்பாடு அதற்குச் சான்றாகும்.

சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு, போரை நிறுத்தவேண்டும் என்றெல்லாம் அரசாங்கம் கூறினாலும், அரசின் ஓர் அங்கமான இராணுவமோ, தான் செய்த தியாகங்கள் வீண் போய்விடக்கூடாது என்ற நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வருவதற்குத் தயாரில்லை. இராணுவ நலன்களை, தமிழ் மக்களின் நலன்களுக்காக விலைபேச முடியாது என்ற தமது பிடியை விட்டுக்கொடுக்க இராணுவம் தயாராக இல்லை.

இதனையே பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்த கருத்துப் பிரதிபலிக்கிறது. அரசாங்கமும் அத்தகைய நிலைப்பாட்டை அங்கீகரித்து இராணுவ அதிகாரிகளின் தாளத்துக்கு ஆடுகிறது.

உண்மை நிலை இப்படியிருக்க, விடுதலைப் புலிகள் புதிது புதிதாக கோரிக்கைகளை அதிகரித்துச் செல்கிறார்கள் என்று சந்திரிகா குற்றஞ்சாட்டுகிறார். போர் நடந்தபோது இராணுவத்தினர் செய்த தியாகங்கள் வீண்போகக்கூடாது என்று கருதும் அரசு, இராணுவம் சம்பந்தப்பட்ட விடயங்களில் விட்டுக்கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

வடக்கு – கிழக்கு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது சம்பந்தமான சகல அம்சங்களிலும் இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்புடையனவாகவே உள்ளன. அந்த விடயங்களில் இராணுவ நலன்களை விட்டுக்கொடுக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தயாரில்லை.

இராணுவத்துக்குக் குட்டுப்போட்டு இருத்திவிட்டு, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க அரசுக்குத் துணிவில்லை. அதனாலேயே சமாதானப் பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஒரங்கட்டிவிட்டு, அடிப்படை அரசியல் பிரச்சினையை முதலில் ஆராய்வதற்கு அரசாங்கம் அவசரப்படுகிறது.

சமாதானப் பேச்சு தடக்குண்டு தாமதப்பட்டுப் போயிருப்பதற்கு இதுவே உண்மையான காரணம். ஆனால் அரசு அதனை மறைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளாலேயே பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக வெளிக்காட்ட முனைகிறது.

1993 இறுதிப் பகுதியில் பூநகரிப் பாதையை திறப்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஊடாக முயன்றபோது, இராணுவ முகாமை ஒரு மைலுக்கு அப்பால் நகர்த்தினால்போதும் என்று விடுதலைப் புலிகள் கூறியிருந்தார்கள். ஆனால் இப்போது முகாமை முற்றாக அகற்ற வேண்டும் என்கிறார்கள் — என்று புலிகள் மீது குற்றஞ்சாட்டும் விதத்தில் பிரசாரம் நடக்கிறது.

சமாதானப் பேச்சுக்களில் நாட்டமில்லாத ஐ.தே.க. அரசு காலத்தில் கூறப்பட்டதை இப்போதைய சூழ்நிலைக்குள் வலிந்துகொண்டு வந்து புகுத்தி, அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் உத்தி இதுவாகும்.

தமிழ் மக்களின் நலனுக்காக இராணுவ நலன்களை விட்டுக்கொடுக்க அரசு தயாராக இல்லாதவரை, சமாதானப் பேச்சு சறுக்கவே செய்யும். முன்னேறுவதும், இலக்கை அடைவதும் சந்தேகத்துக்கு உரியனவே.

# அலரிமாளிகை காவலர்களிடமிருந்து ஆயுதங்கள் சிலவும் மீட்கப்பட்டன!

கொழும்பு, பெப் 1

அலரி மாளிகையில் 500 கிராம் சி-4 வெடிமருந்து மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவ அதிரடிப் படையினர் உத்தியோக பூர்வமாக வழங்கப்படாத சில ஆயுதங்களையும் தம்முடன் வைத்திருந்தமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

வெடி மருந்து வைத்திருந்த இராணுவ அதிரடிப்படை சிப்பாய்கள் இருவரும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவின் பாதுகாப்புக்குப் பொறுப்பான மூன்று பிரிவுகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அதிரடிப்படைப் பிரிவும் ஒன்றாகும். ஏனைய இரண்டும் விசேட பொலீஸ் அதிரடிப்படையும், ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவும் ஆகும்.

அலரி மாளிகையில் வெடிகுண்டு மீட்கப்பட்டது குறித்து விசாரிக்க உயர் மட்ட இராணுவ விசாரணை மன்றம் ஒன்றை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா நியமித்திருப்பது தெரிந்ததே. (ஐ-க)

## பெற்றோல் விலை உயர்வு அரசாங்கமே காரணம்

### கூட்டுத்தாபன தலைவர் கூறுகிறார்

பெற்றோல் விலை சமீபத்தில் லீற்றருக்கு 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதற்கு அரசாங்கம் விதித்த கூடுதலான தீர்வையே காரணம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் சுனில் ஒபேசேகரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோல் விலை அதிகரிப்புக்கு, சர்வதேச சந்தையில் விலை அதிகரிப்பு எதுவும் காரணம் இல்லை என்றும் —

கூடுதல் தீர்வையை வாடிக்கையாளர்கள் மீது சுமத்தி விடுவதைவிட கூட்டுத்தாபனத்துக்கு வேறுவழி இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-க)

### கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை:

## தலைவர் பதவிக்கு சபாநாயகரும் போட்டி

கொழும்பு, பெப்.1

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பதவிக்கான போட்டியில் நாடாளுமன்ற சபாநாயகர் கே. பி. ரத்னாயக்காவும் குதிக்க இருக்கிறார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

காலஞ்சென்ற காமினி திஸாநாயக்கா சபையின் தலைவராக இருந்தபோது உபதலைவர்களாக இருந்த வர்த்தகர் உபாலி தர்மதாச, அனா புஞ்சிஹேவா ஆகியோர் தலைவர் பதவிக்காகப் போட்டியிடப்போவதாக ஏற்கெனவே அறிவித்துள்ளனர்.

இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறும் சபையின் பொதுக்கூட்டத்தில் தலைவர் தெரிவும் இடம்பெறும்.

## ஜெயலலிதா ஆட்சி ஊழல் குறித்து விசாரிக்க வேண்டும்

### வாழப்பாடி கோரிக்கை

ஜெயலலிதா ஆட்சியில் தமிழ் நாட்டில் இடம் பெற்றதாகச் கூறப்படும் பல ஊழல்களை விசாரிக்க விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, பிரதமர் நரசிம்மராவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## கொழும்பில் புலிகளின் தற்கொலைப் படையினர்

### சிங்கள நாளிதழ் செய்தி

கொழும்பு, பெப் 1

தற்கொலைப் படையைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் இரு பெண் போராளிகள் கொழும்புக்கு வந்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டது.

இந்த செய்தி அந்தப் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

பொலீஸாரும், இராணுவத்தினரும் கொழும்பில் தேடுதல்களை ஆரம்பித்துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ 3]

## தமிழ் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைமன்றத்தின் 37ஆவது ஆண்டு தமிழ் இசை விழா இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இன்றைய நிகழ்ச்சியில் ஈழநல்லூர் திரு. மு. பிரேமானந்தன் குழுவினரின் மங்கள இசையும் அதைத் தொடர்ந்து பிரபல தவில் வித்துவான் திரு. பொ. பழனிவேலுக்கு 'இசையரசு' பட்டமளிப்பு, சிறப்புரைகள், பாராட்டுரைகள் என்பனவும் இடம்பெறும். இரவு 7 மணிக்கு திரு. என். கே. பத்மநாதன் குழுவினரின் மங்கள இசை இடம்பெறும்.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ கு. குமரக்குருக்கள், யாழ் பிரதேசச் செயலர் திரு. க. குணராசா, கலாநிதி மரியசேவியர் அடிகளார், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத் தலைவர் திரு. அ. நமசிவாயம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். [க-111]

## திருடப்பட்ட கார் பொலீஸ் பாவனையில்

### பொலீஸ் அதிகாரி விசாரணையில்!

கொழும்பு, பெப். 1

தெற்கில் பணியாற்றிய சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் திருடப்பட்ட கார் ஒன்றை வாங்கி பொலீஸ் பணிக்கெனப் பாவித்தாராம்.

இது சம்பந்தமாக இந்த சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியின் மனைவியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை செய்து வருகிறது.

சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி விரைவில் விசாரிக்கப்படுவார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நீதிவானுக்குச் செய்த முறையீட்டை அடுத்தே இது அம்பலமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவருடைய முறையீட்டின்படி, கல்கிசைப் பிரதேசத்தில் ஜே.வி.பி. காரர் ஒருவரால் திருடப்பட்ட இந்தக்காரை பிரஸ்தாப சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி அபகரித்து தனது மனைவியின் பெயரில் பதிவு செய்திருந்தாராம்.

இது சம்பந்தமாக விசாரணை நடத்தும் பொலீஸ் [illegible] அதிபர் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைக் கோரியுள்ளது. [illegible]

## புதிய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜெட்

### 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, பெப். 1

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதி அமைச்சர் என்ற முறையில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் ஜனாதிபதி சந்திரிகா இரண்டு அம்சங்களில் கூடுதலான கவனம் செலுத்துவார் என அறியப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்திக்கான தேவைகள்—

ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்துக்கு நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தல்— ஆகியவை ஓர் அம்சமாகும்.

மற்றது, சமூக சமத்துவமும் சமூகத்தின் பலவீனமான பகுதிகளைப் பாதுகாப்பதும் ஆகும்.

இதற்காக பல்வேறு சேமநலன் நடவடிக்கைகள் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என நம்பப்படுகிறது. (க)

## பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிப்பது எமது நோக்கம் அல்ல

### தமிழ் எம். பிக்களின் கூட்டணி குறித்து ஆனந்தசங்கரி

கொழும்பு, பெப் 1

அரசுக்கும் – விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுக்களுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் புதிய அரசியல் அமைப்பு எதனையும் ஆரம்பிக்கும் உத்தேசம் எமக்கு இல்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப – தலைவர் வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

மறைமுகமாகவோ, நேரடியாகவோ இந்தப் பேச்சுக்கு குந்தகமாக எந்தவித அமைப்பும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக கொழும்பில் உள்ள தமிழ் எம். பிகள் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளதும்—

தொண்டமான் தலைமையிலான இந்த அமைப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் உட்பட 27 தமிழ் எம். பிக்கள் அங்கம் வகிப்பதும் தெரிந்தவையே. [இ-3]

## உதவித் திட்டத்தின் கீழ் கோதுமை வழங்குவதை அமெரிக்கா நிறுத்தியது

கொழும்பு, பெப். 1

அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு இந்த ஆண்டு பி. எல். 480 உதவியின் கீழ் கோதுமையை வழங்கமாட்டாது. இந்த உதவியை நிறுத்த அது முடிவு செய்துள்ளது.

எதியோப்பியா, மொஸாம்பிக், ஹெய்ட்டி ஆகிய நாடுகளுக்கு இந்த ஆண்டு புதிதாக பி.எல். 480 உதவி வழங்கப்பட உள்ளது.

பி.எல். 480 உதவியைப் பெறக்கூடிய தகைமையுள்ள 25 வறிய நாடுகளில் இலங்கை தற்போது 13ஆவதாக உள்ளது.

பி.எல். 480 உதவி இலங்கைக்கு நிறுத்தப்பட்டாலும் சலுகை அடிப்படையில் அமெரிக்கா கோதுமை வழங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஒட்டிய தலைகளுடன் பிறந்த குழந்தைகள்

### சத்திர சிகிச்சையில் பிரிக்கப்பட்டன

டொராண்டோ, பெப்.1

ஒட்டிய தலைகளுடன் பிறந்த பாகிஸ்தானிய இரட்டைக் குழந்தைகள், கனடாவில் 16 மணி நேர சத்திர சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டன.

ஹிரா, ரிடா ஜமால் என்ற இந்த 2 வயது குழந்தைகளின் மண்டையோடுகளை மீளமைத்து பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சீரமைத்துள்ளனர். எனினும் ஒரு குழந்தையின் ரத்த விநியோகத்தில் சிக்கல் தோன்றியுள்ளதாகவும் காலக் கிரமத்தில் அது சரிவரும் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கராச்சியில் பிறந்த இக்குழந்தைகள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் — உதவியால் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-14)

### யாழ். மாவட்ட

## பாடசாலை அபிவிருத்திக்கு பத்தாண்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பத்தாண்டு திட்டமொன்றைத் தயாரிக்க யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. சர்வதேச நிதி உதவி செய்யும் நிறுவனங்கள் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்குவதற்குத் துணையாக இத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை அதிபர்கள் ஒவ்வொருவரும் தமது பாடசாலைகளில் 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி அபிவிருத்தி, கட்டட நிர்மாணம், உபகரண வசதிகளை பெருக்குதல், நூலகவசதி, விளையாட்டு மைதான விரிவாக்கம், விஞ்ஞான ஆய்வு கூடம் அமைத்தல் ஆகிய பணிகளை திட்டமிட்டு அதற்கான வரைபடங்களுடன் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள். (க-4)

## குறைகேள் அதிகாரிக்கு 300 முறைப்பாடுகள்

கொழும்பு, பெப் 1

புதிதாக நியமிக்கப்பட்ட குறைகேள் அதிகாரி(ஒம்புட்ஸ்மன்) பேராசிரியர் பேற்றம் பஸ்தியாம்பிள்ளை தாம் கடந்த 23ஆம் திகதி பதவி ஏற்றது முதல் 300க்கு மேலான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டதாகத் [illegible] குறைகேள் அதிகாரியைத் [illegible] தொடர்பு கொள்ள முடியாதாலேயே முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன எனவும் அவர் கூறினார்.

"ஒம்புட்ஸ்மன்" என்ற சொல்லுக்கு உரியான சிங்கள, தமிழ்ச் சொல் இல்லை என்று கூறிய பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை, இதனை நாடாளுமன்ற நிர்வாகக் கமிஷனர் என்று அழைக்கலாம் எனவும் கூறினார். [க]

## வடக்கு - கிழக்கு படையினருக்கு பதக்கம்

கொழும்பு, ஜன. 31

வடக்கு—கிழக்குப் பகுதிகளில் பணியாற்றிய படைவீரர்களுக்கு பூர்ணபூமி'' பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 1983 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்துக்குப் பின்னர் தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவையாற்றிய படைவீரர்களே ''பூர்ணபூமி'' பதக்கங்களைப் பெற உள்ளனர்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்தின் முதலாவது அணியின் 8 பிரிவுகளைச் சேர்ந்த 14 உத்தியோகத்தர்களும் 654 வீரர்களும் இந்தப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்கள். (இ-க)

## ஒன்றரை மணிநேரம் தாமதித்து வந்த ஜனாதிபதி

கொழும்பு, பெப்.1

சேர். ஜோன் கொத்தலாவல அகடமியின் பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஒன்றரை மணிநேரம் தாமதமாகவே அந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

கடந்த 24 ஆம் திகதி வைபவம் நடைபெற்றது.

ஜனாதிபதி என்ற ரீதியில் சந்திரிகா ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

## நரோமா கப்பல் சேவை மீண்டும் நடைபெறும்

### புனர்வாழ்வு அமைச்சு அனுமதி

கொழும்பு, பெப்.1

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் 'நரோமா' கப்பல் சேவையை இன்று முதல் ஆரம்பிக்கலாம் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணம் செய்ய விரும்பும் பயணிகள் தமது பயண அனுமதிப் பத்திரங்களை யாழ். அரச அதிபர், திருகோணமலை பிரதேச செயலர், புனர்வாழ்வு அமைச்சு அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஆகியோரிடம் பெறலாம் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் சேவை எந்த திகதியில் நடைபெறும் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை. (இ-3)

## சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 1

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டிகளை கோட்ட மட்டங்கள் ரீதியில் நடத்தவுள்ளது.

உடுவில், சாவகச்சேரி ஆகிய கல்விக் கோட்டங்களுக்கான போட்டி இம்மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமையும் —

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களுக்கான போட்டி இம்மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் — காலை 8 30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டப்போட்டியில் முதல் இடத்தை பெறும் மாணவருக்கான மாவட்ட மட்டப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-5)

## றோட்டறி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். றோட்டறிக் கழகம் ஒழுங்கு செய்துள்ள விசேட கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. வி. பி. சிவானந்தன் ''யாழ். மாவட்டத் தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்'' எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்த்துவார். (இ-4)

## தொலை தொடர்புக்கு ரூ. 45 கோடி

கொழும்பு, பெப்.1

திருகோணமலைமாவட்டத்தில் தொலைத் தொடர்பு சேவைகளின் அபிவிருத்திக்கென 45 கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தபால்தொலைத்தொடர்புகள் அமைச்சர், மங்கள சமரவீரவின் சிபார்சின் பேரில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதலாவது கட்ட நடவடிக்கையாக 1,250 புதிய இணைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கொரிய நிறுவனம்ஒன்றுடன் அரசு கைச்சாத்திட்டுள்ளது. (இ-14)

## பஸ் குண்டுவெடிப்பில் 38 பேர் பலி

அல்ஜியர்ஸ், பெப். 1

அல்ஜீரியாவின் தலைநகரில் உள்ள பொலீஸ் தலைமையகத்திற்கு அருகில் பஸ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்த சம்பவத்தில் 38ற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். 200ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகளே இச்சம்பவத்தை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் இறந்தவர்களில் அநேகர் பாதுகாப்புப் படையினர் ஆவர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மோஸஸ் தங்கராசா

முன்னர் அறிவித்தபடி அமரர் தங்கராசா [ஓய்வு பெற்ற ஆசிரியர்] அவர்களின் நல்லடக்க ஆராதனை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இத்தகவலை யாவரும் அன்புடன் ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தகவல்:
அருட்திரு. ந. கிறிஸ்டிகுமார்
[மகன்]

மெதடிஸ்த திருச்சபை,
புத்தூர் [34970]

## சதாசிவம் கனகரெத்தினம்

சதாசிவம் கனகரெத்தினம் 30-01-1995 திங்கள் காலை சிவபதம் அடைந்தார்.

இவர் திருமதி சொர்ணத்தின் கணவரும், செல்வி. சுமதி [நூலகம் யாழ். மாநகரசபை], செல்வி. சுதாபதி [ஆசிரியை வல். நாவலர் மகா வித்தியாலயம்], சுரேந்திரன் [இ. இந்துக்கல்லூரி மாணவன்] ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-01-95 மாலை 4.00 மணிக்கு நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தகவல்:
மனைவி, மக்கள்

"மதி மஹால்"
6/1, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம் (8222)

## கந்தையா குமாரசாமி (தம்பிஐயா)

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், 63/1 மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமான கந்தையா குமாரசாமி [தம்பிஐயா] நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா - வியாழாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - சின்னதங்கம் தம்பதிகளின் அன்பு மருமானும், கனகசபை [கொழும்பு], முத்தம்மா (கனடா), காலஞ்சென்றவர்களான யோகம்மா, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி [கொழும்பு], சுந்தரம்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற நடராசா, மற்றும் சற்குணராணி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும், பொன்னம்மா [புங்குடுதீவு], காலஞ்சென்ற பொன்னம்பலம், சோமசுந்தரம் [கனடா], கிளாக்கர் சின்னையா, பாக்கியம் [புங்குடுதீவு] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னத்துரை [வெள்ளை சோமு], செல்லம்மா, நாகம்மா, காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, பசுபதிப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அவரின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார் உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;
ச. இராமச்சந்திரன்
[பேரன்]

63/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம் (34974)

ஆசிரியமணி

## ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே. பி.

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே. பி. 30-01-1995 திங்கள் இரவு காலமானார்.

அன்னார் வேதநாயகி, குமாரமூர்த்தி, காலஞ்சென்ற டாக்டர் விநாயகமூர்த்தி ஆகியோர்களின் அருமைத் தந்தையும் டாக்டர் பொ. நாகலிங்கம், கமலகுமாரி என்பவர்களின் பிரியமுள்ள மாமனாரும் ஆவார்

31-01-1995 செவ்வாய் பிற்பகல் 3 மணிவரை கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அன்னாரின் மரணச்சடங்கு சாவகச்சேரி வடக்கில் உள்ள இல்லத்தில் இன்று (01-02-1995) புதன் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பொ. நாகலிங்கம்
[மருமகன்]

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி [34961]

## திருமதி பாக்கியநாதர் றோசம்மா

பெரிய விளானைச் சேர்ந்த பாக்கியநாதர் றோசம்மா 30-01-1995 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை பாக்கியநாதரின் அன்பு மனைவியும், மரியதாஸ், காலஞ்சென்றவரான இரத்தினசிங்கம், மேரி யோசேப்பின் (மனோன்), பிலோமினா (கிளி), காலஞ்சென்றவரான நவரட்ணதுரை (துரை) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவரான அரியமலர் மரியதாஸ், அமல நீற்றா லில்லி, பெனடிற், பற்றிக் மேரிஞான இரத்தினம் ஆகியோரின் பிரிய மாமியாரும், யூடித் ஷெறீன், யூட்சுரேஷ், ரமேஷ், காலஞ்சென்றவரான இருதயராஜ், மேரி ரேணுகா, தவராஜ் பிரேமராணி, அருள் பிறேமதாஸ், எமில் சதீஸ்குமார், அனிற்றா, ஜெயக்குமார், எமில், டொறிஸ், விஜி, ஜெயந்தன், மெடோனா, லொயலா ஆகியோரின் நேசப பேர்த்தியாரும், றொசான், வத்ஸலா, வலன்ரினா ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

இவரது பூதவுடல் இல. 3, அச்சக வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து இன்று (01-02-1995) பி.ப. 3.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கற் திருப்பலியின் பின் பெரியவிளான், புனித. புவானியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பா. மரியதாஸ்

இல 3, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (34960)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01-02-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வட.-கிழக்கிலிருந்து---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
துள்ளதாகவும் 'த ஐலண்ட்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் ஆட்சி நிர்வாகத்தை ஒப்படைக்கும் ஆலோசனையை செயற்படுத்துவதற்கு முன், வடக்கு — கிழக்கில் உள்ள முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் நிலை குறித்து முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் — கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளிடம் வடக்கு — கிழக்கு நிர்வாகத்தை ஒப்படைத்தால் இந்திய — ஸ்ரீலங்கா உறவு பாதிக்கப்படும் என்று கொழும்பில் உள்ள பிரதாப வெளிநாட்டுத் தூதுவர் கருத்து வெளியிட்டுள்ளார் என்றும் "த ஐலண்ட்" தெரிவித்துள்ளது. [அ-இ]

## விவாகம் பின்போடப்பட்டது

சாவகச்சேரி தென்இந்திய சபைப் போதகர்
அருள் திரு. எட்வேட் நயினார் லோறன்ஸ்
அவர்களுக்கும்

றீட்டா இந்திரவதனா பொன்னுத்துரை
அவர்களுக்கும்

04-02-95 சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு நடைபெற இருந்த விவாகம் மணமகளின் தாயாரின் மரணம் காரணமாக பின்போடப்பட்டுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் திருச்சபையார் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திரு. டி. ஜே. பொன்னுத்துரை
(மணமகளின் தகப்பனார்)

"இந்திரா லொட்ஜ்"
வரணி [34969]

## யாழ். றோட்டறிக் கழகத்தின்

ஆதரவில் நடைபெறும்
யாழ். மாவட்ட தடகளப் போட்டிகள்

## அறிவித்தல்

எதிர்வரும் 4, 5 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கான இலக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றை கழகங்களும் தனிப்பட்ட வீரர்களும் இன்றும் நாளையும் போட்டி இணைப்பாளரும் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறை ஆசிரியருமான சண். தயாளனை கல்லூரியில் சந்தித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்,
யாழ்ப்பாணம். [சி/476]

## WANTED TEACHERS TO TEACH

**CHEMISTRY and ZOOLOGY**
in the
Advanced Level Classes
APPLY BEFORE 15th FEBRUARY
To:
The Principal
JAFFNA COLLEGE,
VADDUKODDAI.

[C-468]

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பட்டதாரிப் பிரிவு

464 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### க.பொ.த. (உயர்தரம்) மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

04-02-1995 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அங்குரார்ப்பண நிகழ்வுடன் ஆரம்பமாகும். விண்ணப்பித்தவர்கள் கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். வருப்புக்கள் கிழமை நாட்களில் காலை 8-45 முதல் 1-15 வரை நடைபெறும்.

எங்கள் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| தாவரவியல் | திரு. P.L. மனுவேற்பிள்ளை B.Sc. Dip. in Ed. |
| | திரு. P. ஐங்கரநேசன் B.Sc. [Sp] |
| | திரு. M. ராம்குமார் |
| விலங்கியல் | திரு. S. செல்வநாயகம் B.Sc Dip. in Ed. |
| | திரு. S. கமலநாதன் |
| | திரு. S. சுரேந்திரா |
| தூய, பிரயோக கணிதம் | திரு. A. குணசிங்கம் B Sc. [Sp.] Maths |
| பௌதிகவியல் | திரு. S. சுதாகரன் B.Sc. Dip. in Ed. |
| | திரு. R. குமரன் |
| | திரு. S. உருத்திரமூர்த்தி |
| இரசாயனவியல் | திரு. சத்தீஸ் |
| | திரு. R. பிரபாகரன் |

நான்கு பாடங்களுக்கு மாதக்கட்டணம் 200
[சி-339]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசியலுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் பொருள்களை விற்பனை செய்வதில் உள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

அரசியல் பற்றிப் பேசப் போவதில்லை அது தேவையில்லைஎன்று விட்டுவிட்டேன். அரசியலுடன் தொடர்பு வைத்தால் நான் செய்யபோகும் பணிகள் எல்லாம் பாழாய்ப் போய்விடும். பேதமின்றி, மக்களுக்கு செய்யக்கூடியவற்றை செய்யவே நான் நினைக்கிறேன்.

### கொழும்பில் அலுவலகம்

திருகோணமலையில் உள்ள அலுவலகத்துக்கு போவதற்கு முன்னர் கொழும்பில் அலுவலகம் ஒன்று திறக்கவிருக்கிறேன்.

பல்துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றின் மூலம் திட்டங்களை செயற்படுத்தவிருக்கிறேன்.

வடக்கு - கிழக்கு பகுதி மக்களுடன் நேரடியாகப் பேசி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கவிருக்கிறேன். அதன் மூலம் தான் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

### மக்கள் குழுக்கள்

கிராம மட்டத்தில் மக்கள் குழுக்களை அமைத்து அவர்கள் மூலம் மக்கள் பிரச்சினையை கேட்கவேண்டும்.

அரசியல்வாதிகள் போல நாமும் செயற்பட்டால் மக்களுக்கு நன்மை கிடைக்காது. வட - கிழக்கு மாகாணம் எனக்கு புதிதல்ல. அங்கு பல படங்களை எடுத்துள்ளேன்.

என்ன அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை நான் அறிவேன். புதுவித கைத்தொழில்களை எல்லாம் அங்கு ஆரம்பிக்கவேண்டும் அதற்கு முன்பாக மின்சாரம், வீதிகள், தண்ணீர், போன்ற விடயங்கள் முதலில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தெற்கில் படித்தவர்கள் உள்ளது போன்று யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் படித்தவர்கள் உள்ளனர். அவர்கள் தொழில்வாய்ப்பு பெற முடியாத நிலை உள்ளது.

### புலிகள் காப்பாற்றிய கடல்வளம்

புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகிடைக்கும்.

யார் சண்டை பிடித்தாலும் மக்களுக்குத்தான் கஷ்டம்.

மீன்பிடியாளர்களும் கடந்த 10 வருடங்களாக கஷ்டப்படுகிறார்கள். ஆனால் கொழும்பில் மீன் இல்லை. எங்கள் மீன் வகைகள் எல்லாவற்றையும் வெளியில் இருந்து வந்தவர்கள் பிடித்துச் செல்கிறார்கள்.

வெளியூர்க்காரர் மீன் பிடிக்க இடம் கொடுக்காமல் "பொடியன்கள்" [புலிகள்] எமது தேசிய சொத்தான கடல் வளத்தை காற்பாற்றியுள்ளார்கள் என்றார்.

[ஒ-3]

## ஆளும்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை —

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் அரச உயர்பீடத்தினர் பல விடயங்களிலும் தம்மைப் புறக்கணிப்பதாக அதிருப்தி கொண்டுள்ளனர்.

இவர்களுடன் காமினி திசாநாயக்காவுக்கு விசுவாசமான ஐ. ஐ. தே. முன்னணியினரும் சேர்ந்து இயங்குவது குறித்தும் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. [அ]

## ஓய்வூதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டொரு தினங்களில் இறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிவில் ஓய்வூதியர்களின் ஜனவரி மாத வவுச்சர்கள் இம் மாத நடுப்பகுதிக்கு முன்னர் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-3-7)

## அமைதிச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமுலில் உள்ள போர் இடைநிறுத்தம் குறித்து தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ள ஐரோப்பிய சமூகம், தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தத் தேவையான பொருளாதார உதவிகளை ஐரோப்பிய சமூக நாடுகள் வழங்கும். இது விடயத்தில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து ஐரோப்பிய சமூகமும் செயற்படும் — என்று அந்த விசேட அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தையில் தேக்கநிலை ஏற்பட்டுள்ள இவ்வேளையில் —

ஐரோப்பிய சமூகம் வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கை முக்கியத்துவம் பெறுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [அ-ஐ-6]

## சுவிஸிலிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சுவிஸில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் —

அவர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்பவிருப்பதாகவும் —

அவர்கள் இங்கு திரும்பிய பின் அவர்களின் பொருளாதார, சமூக எதிர்காலம் குறித்து தாம் ஆய்வு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஒ-3-7]

## இலங்கை வங்கி மேற்தரக் கிளை பொன் விழா

இலங்கை வங்கி' யாழ். மேற்தரக் கிளையின் பொன் விழா பூர்த்தியை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை வைபவங்கள் இடம்பெற உள்ளன.

நாளை காலை 8 மணிக்கு நல்லூர் முருகன் ஆலயத்தில் விசேட பூசையும் —

பிற்பகல் 4.00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம் பெறும்.

இந்த இரு நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளை, வாடிக்கையாளர்களுக்கும், முன்னாள் ஊழியர்களுக்கும்' ஆதரவாளர்களுக்கும் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது. [இ]

## வெளிநாட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கின்றனர்.

பிரெஞ்சு வானொலி செய்தியாளர் ஸ்புட்னிக் கிலம்பியா நாளை கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். (ஒ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகராஜா மகாலட்சுமி

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யோகராஜா மகாலட்சுமி 30-01-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி. நாகர் தம்பதிகளின் அன்பு மகளும், செல்லையா யோகராஜாவின் அன்புமனைவியும், ஞானசேகரம் (ஜேர்மனி), கணேசநாதன் [பிரான்ஸ்], கலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலட்சுமி (ஜேர்மனி), சாந்தகுமார் [பிரான்ஸ்], சிவாஜி (தொழில் நுட்பஉத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), ஆகியோரின் அன்பு மாமியாரும, கார்த்திகா [ஜேர்மனி], சுலக்ஷன் [ஜேர்மனி], சுதர்ஷன் [ஜேர்மனி], சபேசினி [பிரான்ஸ்], ஜனனி, சஞ்சிவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (1-2-95) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நவாலி மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா
[கணவன்]

நவாலி தெற்கு [34978]

## வைத்திலிங்கம் ஜெகதாஸ்
### [இராசன்]

(கிராம சேவையாளர் உரும்பராய் வடக்கு யா/264)

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த வை. ஜெகதாஸ் அவர்கள் நேற்று [31-01-95] காலமானார்.

இவர் திருமதி கலாநிதி அவர்களின் அன்புக் கணவரும், செல்வி. துசாராவின் அன்புத் தந்தையும், வைத்திலிங்கம், நல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் திருமதி கமலாதேவி தம்பிராஜா, காலம்சென்ற மு இராசரத்தினம் ஆகியோரின் மருமகனும், மோகனதாஸ் [இளைப்பாறிய அஞ்சல் இலாகா], மோகனராணி, இந்திரதாஸ் [கனடா], இந்திராணி, ஜெயராணி [கனடா] ஆகியோரின் சகோதரரும் திருமதி புவனேஸ்வரி சேனாதிராஜா அவர்களின் பெறாமகனும், ஜமுனாதேவி, கெங்காதேவி, ரஞ்சினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், சிறீதரன் (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி) பாலசரஸ்வதி, சிவனடியார், கிருஸ்ணகுமாரி (கனடா), சிறீதரன், சிவகுமார், கந்தசாமி, பாலச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [1-2-95] புதன்கிழமை காலை 10-00 மணிக்கு தகனக் கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி, மகள், சகோதரர்

உரும்பராய் வடக்கு [34972]

## திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லையா

[ஓய்வு பெற்ற அதிபர், இராமநாதன் கல்லூரி கனிஷ்டபிரிவு]

பெரியமதவடி, உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லையா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நன்னித்தம்பி செல்லமுத்து தம்பதிகளின் புத்திரியும், சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் க செல்லையாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) பாசமிகு மனைவியும், அன்னப்பிள்ளை, சோதிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை), தர்மரத்தினம், காலஞ்சென்ற சரசுவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருந்ததி, இரத்தினம், சரசுவதி, சிவஞானம் [UK], காலஞ்சென்ற நித்தியானந்தன், சின்னத்துரை மற்றும் மகேஸ்வரி (இளைப்பாறிய நெசவு ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜானகி (பல் வைத்தியர், சங்கானை வைத்தியசாலை), பத்மநாதன் (பிரான்ஸ்), குமாரசுவாமி, விக்கினேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் சிறியதாயும் ஹேமாலி றோசறி, (உடுவில்) ஆகியோரின் பேர்த்தியும், குகதர்மினி, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [31-1-95] நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ந. தர்மரத்தினம் (சகோதரன்)

'வசந்தம்'
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (34975)